பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 18 செவ்வாய்க்கிழமை 01.04.2025 கதிர் 144

## இது ரகசியம் அல்ல!

ஐக்கியநாடுகள்மனிதஉரிமைகள் பேரவையில்அடுத்தசெப்டெம்பர்மாதம் இலங்கைமீண்டும்ஒருஅழுத்தத்தை எதிர்கொள்ளவேண்டியிருக்கும்என்று கடுமையாக எதிர்பார்க்கப்படும் ☞2

# பாதாள உலக குழுக்களை ஒழிப்பது எனக்குப் பெரியதொரு விடயமல்ல

### பெருமை பீற்றுகிறார் சரத் பொன்சேகா

பயங்கரவாத அமைப்புக்களை தோற்கடித்துநாட்டைமீட்கமுடியுமெனில் பாதாளஉலகக்குழுக்களைஅழிப்பதொன் றும் எனக்கு பெரிய விடயமல்ல. களத்தில் இறங்கி தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவற்கான பொறுப்பு வழங்கப்பட்டால் நிச்சயம் அதனை செய்வேன் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா தெரிவித்தார்.

கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன்பின்னர்செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராணுவத்தினரைப் பாதுகாப்பு பணிகளில் அமர்த்துமளவுக்கு இன்று தேசியபாதுகாப்புக்குஅச்சுறுத்தல் ☞2



## வாக்களிப்பு உதவியாளர் நடைமுறைகள் அறிவிப்பு

எதிர்வரும் மே 6 நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வாக்களிக்கவுள்ள விசேட தேவையுடைய வாக்காளர்கள் தங்களது வாக்குச் சீட்டை அடையாளமிடுவதற்கு வாக்கெடுப்பு நிலையத்திற்கு உதவியாளர் ஒருவரை அழைத்துச் செல்வது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி, உள்ளூராட்சி ☞2

## தபால் வாக்கு அட்டைகள் சனிக்கிழமை கையளிப்பு

தபால் மூல வாக்களிப்புக்கான வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் சனிக்கிழமை (5) தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்படும் என அரச அச்சகத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்த வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை ஒவ்வொரு மாவட்ட செயலகங்களுக்கும் விநியோகிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான சகல பணிகளும் நிறைவடைந்துள்ள நிலையில் எதிர்வரும் 22, 23 ☞2

## அநுராதபுரத்தை பாதுகாக்க பாரிஸில் இன்று மாநாடு

உலக பாரம்பரிய சொத்துக்களில் ஒன்றான இலங்கையின் புனித நகரமான ‘அனுராதபுரத்தையும் அதனுடன் தொடர்புடைய வாழ்வியல் ☞2

## பெற்றோல் விலை 10 ரூபா குறைப்பு

ஒக்டேன் 92, ஒக்டேன் 95 ரக பெற்றோலின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. ஏனைய எரிபொருள் பொருட்களின் விலையில் எவ்வித மாற்றமுமில்லை என்று பெற்றோலிய கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

மாதாந்த எரிபொருள் விலை சூத்திரத்துக்கு அமைவாக நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் விலை ☞8

# தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முறைகேடாகப் பயன்படுத்துகின்றது

### சட்டத்தரணி சுவஸ்திகா பகிரங்கக் குற்றச்சாட்டு

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை துஸ்பிரயோகம் செய்கின்றது என்பதை வெளிப்படுத்தியுள்ளதுஎனசட்டத்தரணியும் சமூக செயற்பாட்டாளருமான சுவஸ்திகா அருளிங்கம் தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த இளைஞனின் கைதுக்கான பல காரணங்களை தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள இளைஞன் இஸ்ரேலியர்களிற்கு எதிரான வெறுப்பு பேச்சுக்களில் கருத்துவெளிப்பாட்டில் ஈடுபட்டான் என தெரிவிக்கின்றனர், இஸ்ரேலியர்களிற்கு எதிரான வெறுப்பு பேச்சுக்கள் என்றால் அது யூத எதிர்ப்பு.

இந்த நாட்டில் வெறுப்பு பேச்சுக்கு எதிராக சட்டங்கள் உள்ளன, அந்த இளைஞன் அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தால் அந்தச் சட்டத்தின் கீழ் கைதுசெய்திருக்கவேண்டும்.

நான் இவர்கள் முன்வைத்த குற்றச் சாட்டுகளை நம்புகின்றேன் எனத் ☞2

## சமையல் எரிவாயு விலை ரூபா 420 திடீர் அதிகரிப்பு



லாப் ரக எரிவாயு சிலிண்டர் விலையை அதிகரிப்பதற்கு லாப் நிறுவனம் ☞8

## வாக்குமூலம் வழங்கிய முன்னாள் அமைச்சர்

குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தில் வாக்குமூலம் அளிக்க இன்று காலை சென்றிருந்தமுன்னாள்பொதுப்பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், திணைக் களத்தை விட்டு வெளியேறியுள்ளார்.

அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், அவரிடமிருந்து ஐந்தரை மணிநேரத்திற்கும்மேலாகவாக்குமூலம் பதிவுசெய்தபின்னரே அவர் அங்கிருந்து



வெளியேறியுள்ளார். ☞2

## மக்கள் பிரச்சினை விளங்கக்கூடிய தலைவர் ஒருவரே இன்று தேவை

### எதிர்க் கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

இந்த நாட்டிற்கு மக்களினது பிரச்சினைகளை விளங்கிக்கொள்ளும்தலைவர் ஒருவர் தேவை என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

சமாதான நீதிவான், கொரிகஸ்வெவ சந்திரரதன நாயக்க தேரருக்கு மல்வத்து பீடத்தின் மகாசங்கத்தினரின் ஆசியுடன் இரண்டாம் சங்கநாயக்க பதவிப் பத்திரம் மற்றும் கௌரவப் பட்டம் வழங்கும் நிகழ்வில் ☞8



## பிரிட்டனின் தடையை எதிர்த்து கொழும்பில் நேற்று போராட்டம்

இலங்கையின்பாதுகாப்புபடைகளின் முன்னாள் பிரதானிகள் மூவருக்கு எதிராக பிரித்தானிய அரசாங்கம் விதித்துள்ளதடைக்குஎதிர்ப்புதெரிவித்து தேசிய சுதந்திர முன்னணியினர் கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் முன்பாக நேற்று திங்கட்கிழமை எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். குறித்த தடையை நீக்குமாறு வலியுறுத்தி பிரித்தானிய உயர்ஸ்தானிகர் காரியாலயத்தில் மகஜர் ஒன்றை கையளித்தனர்.

இந்த போராட்டத்தில் ☞8

## இந்தியாவுடன் செய்யப்படவுள்ள ஒப்பந்தங்களை பகிரங்கப்படுத்துக

### ஐக்கிய மக்கள் சக்தி ஆளும்தரப்புக்கு நெருக்கீடு

இந்தியாவுடன் செய்து கொள்ளப்படவுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பில் ஆளும்தரப்புப் பகிரங் கமாக அறிவிக்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க வலியுறுத்தினார்.

கண்டியில் திங்கட்கிழமை செய்தியாளர்களிடம்பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்த தாவது:

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைப் பயணத் தின்போதுகையெழுத்திடப்படவுள் ளதாகக் கூறப்படும் ஒப்பந் ☞8

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

நிலையில், அதனை எதிர்கொள்வதற்கான தயார்ப்படுத்தல்களில் ஆளும்தரப்பு இப்போதே அவசரம் காட்டத் தொடங்கியிருக்கிறது. ஐ.நாவில் நிலமை மோசமடையாமல் இருப்பதற்கு ஏற்ற வகையில் யாரிடம் இந்தப் பொறுப்புக்களைக் கையளிப்பது என்று ஆளும் தரப்பு இப்போதே தேடி வருகின்றது. ஆனால் கேள்வி, இலங்கைக்கு நன்மை பயக்கும் வகையில் இந்தச் சூழ்நிலையை நிர்வகிக்க யாரை நம்புவது என்பதுதான்.

ஜெனீவாவில் இலங்கையின் தற்போதைய நிரந்தர பிரதிநிதி ஹிமாலி சுபாஷினி அருணதிலகா. இலங்கை எதிர்கொள்ளும் இந்தக் கடுமையான பிரச்சினையை நிர்வகிக்க அவருக்கு அனுபவம் உள்ளதா என்று பலரும் சந்தேகிக்கின்றனர். ஆளும்தரப்புக்குள்ளும்கூட இந்தச் சந்தேகம் இருக்கிறது.

செப்டெம்பர் பிரச்சினைக்கு ஒரு தீவிரமான அரசியல் பரிமாணம் இருப்பதால், இதுபோன்ற ஒரு பிரச்சினையை நிர்வகிக்க அயல் உறவுகள் மற்றும் அரசியல் அனுபவம் உள்ள ஒருவர் இருக்க வேண்டும் என்று பலர் நினைக்கிறார்கள். மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் அமைச்சர் மகிந்த சமரசிங்கவிடம் பொறுப்பை ஒப்படைத்தது போன்று பொருத்தமான யாராவது அமைவார்களாக என்று தேடத் தொடங்கியிருக்கிறார்களாம்.

மகிந்த சமரசிங்க இப்போதும் அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதராகப் பணியாற்றுகிறார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர் என்ற பல பதவிகளையும் வகித்தவரான மகிந்த சமரசிங்க, இலங்கைக்கு மிகவும் முக்கியமான காலகட்டமாக இருந்த உள்நாட்டுப் போரின் வெற்றிக்குப் பிறகு மகிந்த ராஜபக்ச ஆட்சியின் கீழ் ஜெனீவாவில் பணியாற்ற வந்தார்.

சர்வதேச சமூகம் ஒரு காலத்தில் இலங்கை மீது போர்க்குற்றங்கள் என்ற அழுத்தம் காட்டியபோது அதை வெற்றிகரமாகச் சமாளித்தவர் மகிந்த சமரசிங்க. இலங்கைக்கு ஆதரவான நாடுகளின் ஆதரவுடன் அந்த திட்டத்தை வெற்றிகரமாக தோற்கடிக்க முடிந்தது. மகிந்த சமரசிங்கவைத் தவிர, பேராசிரியர் பீரிஸும் இதேபோன்று வெளிநாட்டு உறவுகள் மற்றும் அரசியல் அனுபவத்தைக் கொண்டவர்.

இருப்பினும், தற்போதைய சூழ்நிலையில், ஜெனீவா பிரச்சினையைக் கையாள ஆளும்தரப்பு மகிந்த சமரசிங்கவையோ அல்லது ஜி.எல்.பீரிஸையோ அழைத்தால் இவர்களுக்கு அனுபவமில்லை, ஒன்றும் தெரியாது என்ற குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்ள வேண்டியவரும் என்பதால் வேறு யாரைத் தேடுவது என்பதுதான் ஆளும்தரப்பின் பிரச்சினை.

இந்தமுறை ஜெனீவா பிரச்சினையை நிர்வகிக்க அனுப்பத் தயாராகும் இலங்கைக் குழுவின் தலைவர் யார் என்பது குறித்து கடுமையான கேள்வி உள்ளது. பொருத்தமான நபர் எவரும் கிடைக்கவில்லை என்றால் வாஷிங்டனில் உள்ள மகிந்த சமரசிங்கவையே மீண்டும் ஜெனீவாவிற்கு அனுப்ப ஆளும்தரப்பு இரகசியத் திட்டம் வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த செப்டம்பரில் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள மனித உரிமைகள் தீர்மானம் ஆளும்தரப்புக்கு ஒரு சவாலாகும் என்று தெரிகிறது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தேசிய மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கவில்லை ஆனால் அந்த இளைஞர் அவ்வாறு செயற்பட்டிருந்தால் குறிப்பிட்ட சட்டங்களின் கீழ் இந்த விவகாரத்தை கையாண்டிருக்கவேண்டும்.

வெறுப்பு பேச்சுக்காக மக்களைப் பயங்கரவாதசட்டத்தின்கீழ் கைதுசெய்கின்றீர்கள் என்றால் நாட்டில் அதிகளவான மக்களையும், நாடாளுமன்றத்தின் பல உறுப்பினர்களையும் இதற்காகக் கைதுசெய்யவேண்டும்.

வெறுப்புப் பேச்சு என்பது தமிழர்கள் முஸ்லிம்களிற்கு எதிராக நாங்கள் கேள்விப்படாத விடயம் இல்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் முஸ்லீம்கள் எவ்வளவு குரோத பேச்சுக்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது என்பது எங்கள் அனைவருக்கும் நன்கு தெரியும்.

அவ்வாறான வெறுப்பு பேச்சுக்களில் ஈடுபட்ட எத்தனை பேர் கைதுசெய்யப்பட்டனர் என்பது கேள்விக்குரிய விடயம்.

ஆகவே நாங்கள் மீண்டும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஆபத்தினை பார்க்கின்றோம், அது எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது, அது எவ்வளவு தூரம் இந்த ஆளும்தரப்பாலும் துஸ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது என்பதை காண்கின்றோம் - என்றார்.

## வாக்களிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைத் தேர்தலில் வாக்களிக்கவுள்ள விசேட தேவையுடைய வாக்காளர்கள் தங்களது வாக்குச் சீட்டை அடையாளமிடுவதற்கு வாக்கெடுப்பு நிலையத்திற்கு உதவியாளர் ஒருவரை அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விசேட தேவையுடையவாக்காளர்களுடன் வாக்கெடுப்பு நிலையத்திற்கு செல்லும் உதவியாளர்கள்,

1. 18 வயதை பூர்த்தி செய்த ஒருவராக இருத்தல் வேண்டும் என்பதோடு தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளராக இருத்தல் கூடாது.

2. தேர்தலில் போட்டியிடவுள்ள அரசியல் கட்சி ஒன்றின் அதிகாரமளிக்கப்பட்ட முகவராகவோ வாக்கெடுப்பு நிலையத்தின் முகவராகவோ இருத்தல் கூடாது.

3. விசேட தேவையுடைய வாக்காளர்கள் தங்களது உதவியாளர்களை உடன் அழைத்துச் செல்ல தகுதி சான்றிதழல் ஒன்றை உரிய வாக்கெடுப்பு நிலையத்தின் அலுவலருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

4. தகுதி சான்றிதழலை பெற்றுக்கொள்ள தேவையான விண்ணப்பங்களை கிராம அலுவலர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும் அல்லது ஜுமிமிஞீவி://ழுழுழு. ளயிளஉ.மிஷ்லிஜவி.ஆலிஸ.யிவ/ என்ற தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

## தபால்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் 24 ஆகிய தினங்களில் தபால்மூல வாக்களிப்பு நடைபெறவுள்ளது.

இந்த மூன்று தினங்களில் வாக்களிக்க தவறும் அரச உத்தியோகஸ்த்தர்கள் ஏப்ரல் 28 மற்றும் 29 ஆகிய இரண்டு தினங்களில் வாக்களிப்பதற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல் பொதுவாக்காளர் அட்டைகளை எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் அரச அச்சகத் திணைக்களம் ஒப்படைக்கப்படவுள்ளது.

ஏப்ரல் 20 மற்றும் 27 ஆகிய இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளிலும் விசேட தபால் சேவை ஊடாக வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படும் என்று தபால் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## அநுராதபுரத்தை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாரம்பரியத்தையும் பாதுகாப்பதற்கான ஒருங்கிணைந்த மற்றும் நிலையான அணுகுமுறை' என்ற தலைப்பில் சர்வதேச நிபுணத்துவ மாநாட்டின் உயர்மட்டப் பிரிவில் பங்கேற்பதற்காக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பிரான்ஸ் தலைநகர் பாரிஸிற்குப் பயணமாகியுள்ளார்.

யுனெஸ்கோ தலைமையகத்தில் இந்த மாநாடு இன்று இடம்பெறவுள்ளது. யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகம் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளார்.

இலங்கையுடன் இணைந்து யுனெஸ்கோ அமைப்பு இந்த மாநாட்டினை ஏற்பாடு செய்துள்ளது. யுனெஸ்கோவில் உலக பாரம்பரிய மரபுரிமை சொத்தாக கருதப்படும் கலாசார மற்றும் வரலாற்று முக்கியத்தும் வாய்ந்த அனுராதபுரத்தை பாதுகாப்பதற்கான நிலையான உத்திகளைப் பற்றி கலந்துரையாடுவதற்கென சர்வதேசத்தின் முன்னணி நிபுணர்களை இணைக்கும் சந்தர்ப்பமாக இது அமையவுள்ளது.

# தேநீர் உட்பட பலவற்றின் விலைகளும் எகிறுகின்றன

பால் மாவின் விலை அதிகரிப்பால், பால் தேநீரின் விலை மற்றும், பால் சார்ந்த பழச்சாறுகள், சீஸ் ஆகியவற்றின் விலைகள் திங்கட்கிழமை நள்ளிரவு 12.00 மணி முதல் 10 ரூபாவால் அதிகரிக்கப்படும் என்று அகில இலங்கை சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் (AICROA) ஹர்ஷனா ருக்சன் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பால் மாவின் விலை உயர்வைக் கருத்தில் கொண்டு, பால் தேநீர் தவிர, பாலைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் அனைத்து வகையான பழச்சாறுகளின் ஒரு கோப்பையின் விலை இன்று நள்ளிரவு முதல் 10 ரூபாயால் அதிகரிக்கப்படும்.

இது தவிர, பாலைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் சீஸ், உள்ளிட்ட பலவகையான உணவுப் பொருட்களின் விலையும் ரூ.10 உயர்த்தப்படும் என்று சங்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

# மியான்மருக்கு உதவிகள் அனுபுவது பற்றி ஆராய்வு

மியன்மாருக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவது மற்றும் அவசர பதிலளிப்பு குழுக்களை அனுப்புவது தொடர்பாக ஆளும்தரப்பு கவனம் செலுத்தியுள்ளது.

அந்த நாட்டில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான மனிதாபிமான உதவிகளையும், தேடுதல் மற்றும் மீட்பு குழுக்களையும் ஒருங்கிணைப்பதற்காக தேவையான ஆரம்பகட்ட கலந்துரையாடல் ஒன்று, இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் நேற்று அதன் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பாதுகாப்பு அமைச்சு, வெளியுறவு அமைச்சு, சுகாதார அமைச்சு, இலங்கை இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ், ஏனைய பங்குதாரர் அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள், ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் மற்றும் உள்ளூர் மற்றும் சர்வதேச அரசு சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அதிகாரிகள் குழு இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் தேவைகளுக்கு ஏற்ப நிலவும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, உடனடியாக தேவையான மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான ஒருங்கிணைப்பு பொறிமுறையை உருவாக்குவது மற்றும் அவசர பதிலளிப்பு குழுக்களை மியன்மாருக்கு விரைவாக அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பது குறித்து இந்த கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# 30 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பாம்

## மீண்டும் அநுர வாக்குறுதி

அரச சேவையில் 30,000 இளைஞர் யுவதிகளை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு புத்தள நகரில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

நாங்கள் 30,000 புதிய, திறமையான இளைஞர்களை வேலைக்கு அமர்த்துகிறோம். பணம் இப்போது ஒதுக்கப்பட்டுள்ளது. இப்போது நிறைய செய்தித்தாள்களில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. விண்ணப்பியுங்கள், நாங்கள் உங்களுக்கு வேலை வாங்கித் தருகிறோம்.

மேலும் அஸ்வெசும பெறாத ஒரு குழு உள்ளது. அவர்களுக்கு தகுதி இருந்தும் அவை கிடைப்பதில்லை. நாங்கள் விண்ணப் பங்களைக் கோரியுள்ளோம். இப்போது, ஜூன் மாதத்தில் தேர்வு செய்யும் சபை ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட 400,000 குடும்பங்களுக்கு புதிதாக அஸ்வெசும கொடுப்பனவை வசதியை வழங்க நடவடிக்கை மேற்கொள்வோம்.

அதேபோல, அரசசேவையில் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது, ஓய்வூதியதாரர்களுக்கான கொடுப்பனவு உயர்த்தப்பட்டுள்ளது. அஸ்வெசும கொடுப்பனவு தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. இவை எதுவுமே கிடைக்காமல் 8 இலட்சம் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்காக 5000 ரூபா பெறுமதியான உணவுப் பொதியை சதொச ஊடாக 2500 ரூபாவுக்கு வழங்குகிறோம்.

## வாக்குமூலம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2023ஆம் ஆண்டு வெலிகமவில் உள்ள ஒரு முக்கிய ஹோட்டலுக்கு முன்னால் நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் அளிக்கவே, முன்னாள் அமைச்சர் இன்று காலை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு சென்றிருந்தார்.

இந்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு தற்போது இடைநீக்கம் செய்யப்பட்ட முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றப்பிரிவு, வெலிகம பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த அதிகாரிகள் சம்பந்தப்பட்ட மேற்படி துப்பாக்கிச் சூடு சம்பவத்தின் விளைவாக, கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரி ஒருவர் உயிரிழந்ததாகவும், மற்றொருவர் காயமடைந்ததாகவும் தேசபந்து தென்னகோன் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அவர் வாரக் கணக்கில் தலைமறைவாகி இருந்தார். பின்னர் மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் சரணடைந்த பின்னர் ஏப்ரல் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

## பாதாள ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை. ஆனால் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் தலைதூக்கியுள்ளன. அவர்கள் இன்றும் மிகவும் சுதந்திரமாக தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். இது மிகவும் ஆபத்தான சூழலாகும். எனவே மக்கள் அச்சமின்றி சுதந்திரமாக வாழக்கூடிய சூழலை ஆளும்தரப்பு உருவாக்கவேண்டும்.

பாதாள உலகக் குழுக்களை கட்டுப்படுத்துவதில் ஆளும்தரப்புத் தோல்வியடைந்துள்ளது. கடந்தகாலங்களுடன் ஒப்பிடும்போது துப்பாக்கிச்சூடுகளும் மனிதப்படுகொலைகளும் அதிகரித்துள்ளதே தவிர குறைவடையவில்லை. அனுபவம் மிக்கவர்கள் களத்தில் இறங்கினால் மாத்திரமே இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# தேசிய மக்கள் சக்தி அரசு உள்ளூராட்சி விடயங்களை இராணுவமயப்படுத்துகிறது

## வலி.கிழக்கு முன்னாள் தவிசாளர் குற்றச்சாட்டு

அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரிய நிர்வாக ஒழுங்குகளுக்குள்ளாக கடமைகளை திணைக்களங்களுக்கு அறிவுறுத்தி அவற்றின் வாயிலாக மக்களுக்கான சேவையைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமே தவிர இராணுவத்தைப் பயன்படுத்தி சாதாரண சிவில் நிர்வாகத்தை செயல்திறன் குன்றியதாக மாற்றக்கூடாது. இராணுவமயமாக்கத்தை ஊக்குவிக்க கூடாது என முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தை நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தலைமையில், இராணுவ குழுக்கள் இணைந்து துய்மிப்புப் பணியில் ஈடுபட்டமை குறித்து தனது அதிருப்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மக்களையோ அல்லது கட்சித் தொண்டர்களையோ ஈடுபடுத்தி யாழ்.மத்திய பஸ் நிலையம் தூய்மிக்கப்பட்டிருக்குமாயின் நாம் அதனை வரவேற்றிருப்போம்.

மாறாக அரச அதிகாரத்தின் வாயிலாக, இராணுவத்தை பெருமளவில் அழைத்து வந்து யாழ்.மாநகர சபை ஆற்ற வேண்டிய தூய்மிப்புப் பணியை அரச எம்.பி இளங்குமரன் மேற்கொண்டுள்ளார்.

தங்களிடத்தில் யாழ். மத்திய பேருந்து நிலையத்தினை துப்புரவு செய்ய வேண்டிய நன்நோக்குக்காணப்படுமாயின் தங்கள் கட்சி ஆட்சியில் உள்ள அரசாங்கம் என்பதன் அடிப்படையில் சாதாரணமாக அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தால் அவர்கள் சிவில் நிர்வாக ஒழுங்கு முறைகளுக்கு அமைவாக பொறுப்பு வாய்ந்த திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் மேற்படி நடவடிக்கையினை மேற்கொண்டிருக்க முடியும். யாழ் மாநகர சபையில் ஆளணி வளம் உள்ளது. யாழ் மாநகர சபை நாடாளுமன்ற உறுப்பினரின் கோரிக்கைக்கு செவி சாய்க்கவில்லையானால் ஆளுநர் மாகாண உள்ளூராட்சி திணைக்கள விடயங்களுக்கு அதிகாரம் பொருந்தியவராகவுள்ளார்.

அவர் ஊடாக ஏதும் நடவடிக்கை எடுத்திருக்கலாம். இவற்றுக்கு மேலதிகமாக பொதுமக்களைத் திரட்டி அல்லது கட்சித் தொண்டர்கள் ஊடாக சிரமதானத்தில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால் அப்படிச் செய்யாது பெருமளவான இராணுவத்தினரைப் பயன்படுத்தி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளீர்கள். இராணுவத்தினரை சிவில் நிர்வாகம் ஊடக மேற்கொள்ள வேண்டிய பணிகளில் தவிருங்கள். கடந்த கோட்டாபய காலத்திலும் இராணுவத்தினை உள்ளூராட்சி விடயப்பரப்புகளுக்குள் நுழைப்பதற்கு பெரும்பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் நான் உள்ளூராட்சி மன்றம் ஒன்றின் தலைவர் என்ற வகையில் அவற்றினை முற்றாக நிராகரித்திருந்தேன்.

நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களே இராணுத்தின் தயவில் இயங்கினால் தங்கள் கட்சி சார்ந்த எதிர்காலத்தில் தெரிவாகக் கூடிய உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சபைகளில் சிறிய வேலைகளைச் செய்வதற்கும் இராணுத்தினையே அழைக்க எத்தனிப்பர்.

எனவே இராணுவ ஒடுக்குமுறைகளுக்கு இனமாக ஆட்பட்டிருக்கும் எமது இனத்திற்கு இன்றுவரையில் தங்கள் கட்சி ஆரோக்கியமான பொறுப்புக்கூறலையோ தீர்வை முன்வைப்பதற்கோ முன்வரவில்லை. இவ்வாறிருக்க சாதாரண விடயங்களிலும் இராணுவ பிரசன்னத்தினையும் இராணுவமயமாக்கத்தினையும் மேற்கொள்வது எமது மக்களை மேலும் ஒடுக்குமுறைக்குள்ளாக்கும் செயற்பாடாகும் என வலி கிழக்கின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

## 96 கிலோ கஞ்சாவுடன் ஏ32 வீதியில் மூவர் கைது

(சுபேசன்)



சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்குப்பிட்டிப் பாலத்தை அண்மித்த ஏ32 வீதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு 96கிலோகிராம் கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் விசேட அதிரடிப்படையின் உதவியுடன் மேற்படி கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது வான் ஒன்றில் 45கஞ்சா பொதிகளை எடுத்துச் சென்ற வவுனியா பகுதியைச் சேர்ந்த மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.



## யாழ்ப்பாணம் சிறையிலிருந்த கணவனுக்கு உணவு கொண்டுசென்ற மனைவி விபத்தில் சிக்கி இறப்பு

யாழ். சிறைச்சாலையில் இருந்த கணவனுக்கு உணவு கொண்டு சென்ற மனைவி ஒருவர் விபத்தில் சிக்கிய நிலையில் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மரணமடைந்துள்ளார். இதன்போது கைதடி - தச்சன்தோப்பு பகுதியைச் சேர்ந்த ஜெயரத்தினம் சுசீலா (வயது 57) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

குறித்த பெண், கடந்த 13ஆம் திகதி சிறையில் உள்ள தனது கணவனுக்கு உணவு கொடுப்பதற்காக கைதடி வீதியால் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தார். இந்நிலையில் அதே வீதியால் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று அவரை மோதித் தள்ளிவிட்டு தப்பிச் சென்றது.

இந்நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த குறித்த பெண் சிகிச்சை பலனின்றி 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மதியம் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

## சிறந்த பெறுபெறுகளைப் பெற உழைத்த ஆசிரியர்களுக்கு நுவரவில் கௌரவம்

(கேதீஸ்)

நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்டம் ஒன்றின் பாடசாலைகளில் நடந்து முடிந்த புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற கற்பித்த ஆசிரியர்கள் அப்பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் அதற்கு வழிகாட்டியாக செயற்பட்ட ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வு கோட்டம் ஒன்றின் கோட்டக் கல்விப் பணிப்பாளர் காந்தரூபன் ஏற்பாட்டில் நுவரெலியா பரிசுத்த திருத்துவ கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நுவரெலியா வலயக் கல்விப் பணிப்பாளர் டீ.திசாநாயக்க , பிரதி கல்விப் பணிப்பாளர் எம்.கணேஸ்ராஜ், மத்திய மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் சுனித்தா பீமேகெதர ஆகியோர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் காந்தரூபன் மற்றும் அதிபர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் அதிதிகளால் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதோடு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இந்நிகழ்வில் நுவரெலியா வலயக் கல்விப் பணிப்பாளர் டீ.திசாநாயக்க , பிரதி கல்விப் பணிப்பாளர் கணேஸ்ராஜ், மத்திய மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் சுனித்தா பீமேகெதர, கல்வி அபிவிருத்தி உதவி கல்விப் பணிப்பாளர் கிருபாகரன், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் காந்தரூபன், ஜெகதீஸ்வரன், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்துக்கொண்டனர்.





நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# தவறிழைக்குமா தேசிய மக்கள் சக்தி?

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் [PTA] பல தசாப்தங்களாக இலங்கையின் மிகவும் சர்ச்சைக்குரிய சட்டக் கருவிகளில் ஒன்றாகும். கடந்த சில தினங்களாக அது மீண்டும் சர்ச்சைக் குரியதாக இருக்கின்றது. ஆளும் தரப்பான தேசிய மக்கள் சக்தி தான்மக்களுக்குவழங்கியவாக்குறுதிகளைகைவிட்டதற்கும், கடந்த கால ஆளும் தரப்புக்களின் மிக மோசமான நடவடிக்கைகளைத் தொடர்வதற்கும் ஒரு முக்கிய அடையாளமாகவும் பயங்கரவாதத் தடைச் சட்டம் மாறியுள்ளது. இது தொடர்பில் ஆளும்தரப்பு கடுமையானவிமர்சனங்களைஎதிர்கொள்ளும்நிலைஏற்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டு ஒரு தற்காலிக நடவடிக்கையாக முதலில் இயற்றப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம், 40 ஆண்டுகளுக்கும் மேலாக நடைமுறையில் உள்ளது, மனித உரிமை அமைப்புகள், சட்ட வல்லுநர்கள் மற்றும் சர்வதேச சமூகத்தின் அதிகளவு கண்டனங்களைப் பெற்ற சட்டம் என்றால் இதுதான் என்று சொல்லிவிடலாம். குற்றச்சாட்டு இல்லாமல் நீண்டகாலமாக தடுத்து வைக்க அனுமதிக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பரந்த விதிகள் பெரும்பாலும் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன, இது மனித உரிமை மீறல்கள் மற்றும் கருத்து வேறுபாடுகளை அடக்குவது குறித்த கவலைகளுக்கு வழிவகுக்கிறது.

அதிகரித்து வரும் அழுத்தத்திற்கு பதிலளிக்கும் விதமாக, ரணில் ஆட்சி, செப்டம்பர் 15, 2023 அன்று பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவை அறிமுகப்படுத்தியது, இது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மாற்றும் நோக்கில் முன்மொழியப்பட்டாலும் பழைய சட்டத்தைவிடப் பயங்கரமானது என்ற கடும் விமர்சனங்களை எதிர்கொண்டது. அதையடுத்து புதிய சட்ட வரைவு நிறைவேற்றப்படுவதைத் தள்ளிப்போட்ட ரணில் ஆட்சி, பழைய சட்டத்தை நீக்குவதற்கும் மறுத்துவிட்டது.

சர்வதேச சட்ட வல்லுநர்கள் ஆணையம் [ஐசிஜே] தனது விமர்சனத்தில் இந்தச் சட்டத்திற்கு எதிராகத் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது,

இலங்கை மனித உரிமைகள் ஆணையம் [HRCSL] நாட்டின் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களை விரிவாக மறுஆய்வு செய்ய அழைப்பு விடுத்துள்ளது. சுயாதீன கண்காணிப்புக் குழுக்களை நிறுவவும், நியாயமற்ற முறையில் குறிவைக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு வழிமுறைகளை உறுதி செய்யவும், எந்தவொரு புதிய சட்டமும் எதிர்ப்புக் குரல்களை அடக்குவதற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்யவும் மனித உரிமைகள் ஆணையம் வலியுறுத்தியுள்ளது. மக்களின் அடிப்படை உரிமைகளை மீறாமல் தேசிய பாதுகாப்பை நிலைநிறுத்தும் ஒரு சமநிலையான அணுகுமுறையின் அவசியத்தை ஆணையத்தின் நிலைப்பாடு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

கடந்த காலங்களில் ஆட்சியைப் பிடிப்பதற்கு முன்பதாக தேசிய மக்கள் சக்தியும் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு முற்றிலும் எதிராக இருந்தது. தாம் ஆட்சிக்கு வந்தால் இந்தச் சட்டத்தை நீக்குவோம் என்று வாக்குறுதியளித்தது. ஆனால், அதிகாரத்தைக் கைப்பற்றியதும் இந்தச் சட்டம் தொடர்பான ஆளும்தரப்பின் சுருதி மாறத் தொடங்கியிருந்தது. சட்டத்தில் தவறில்லை, அதனைப் பயன்படுத்துபவர்கள் சரியாகப் பயன்படுத்தினாலே போதுமானது என்று ஆளும்தரப்பு சமாளிக்கப் பார்த்தது. ஆளும்தரப்பின் இந்தத் தலைகீழ் நிலைக்கு கடும் கண்டனங்கள் எழுந்ததை அடுத்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றுவோம் என்று ஆளும்தரப்பு உறுதியளித்தது. ஆனால் புதிய நாடாளுமன்றம் அமைந்து 4 மாதங்கள் கடந்துள்ளபோதும் அதற்கான அறிகுறிகள் எவையும் இல்லை. இப்போது பயங்கரவாதத் தடைச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றது என்கிற குற்றச்சாட்டை ஆளும்தரப்பு எதிர்கொள்ளும் நிலைக்கு வந்துள்ளது.

பாலஸ்தீனர்களுக்கு ஆதரவாக இஸ்ரேலியர்களுக்கு எதிராக கொழும்பில் சுவரொட்டிகளை ஒட்டிய முஸ்லிம் இளைஞர்கள் ஒருவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருப்பதைத் தொடர்ந்தே புதிய சர்ச்சைகள் வெடித்துள்ளன. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பும் முறைகேடாகப் பயன்படுத்துகின்றது என்கிற விமர்சனங்கள் வெடித்துக் கிளம்புகின்றன.

பயங்கரவாதத்தடைச்சட்டத்தைமாற்றுவதற்கானஆளும்தரப்பின் விருப்பம்அது குறைபாடுகள்நிறைந்தது என்பதைஒப்புக்கொள்கிறது. இலங்கை ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கான அதன் உறுதிப்பாட்டைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டுமானால், பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக அகற்றப்படவேண்டும். அதற்குப் பதிலாக ஏற்கனவே உள்ள சட்டங்களின் கீழ் முறையான முழுமையான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படவேண்டும்.

ஆளும்தரப்பு தான் வழங்கிய வாக்குறுதிகளில் பற்றுறுதியோடு இல்லை என்கிற விமர்சனங்கள் வலுத்துவரும் நிலையில் இந்த விவகாரமும் இப்போது ஆளும்தரப்புக்குப் பாரமாக மாறியுள்ளது. ஆனால், இது தீர்க்கப்படக்கூடியாது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதன் மூலம் அதனை ஆளும்தரப்பு உடனடியாக இதனைத் தீர்க்க முடியும்.

# பலஸ்தீனத்துக்கு ஆதரவாக கிண்ணியாவில் நோன்பு

## பெருநாள் தொழுகையின்பின் அமைதி வழி கவனவீர்ப்பு

(ஹஸ்பர்)

நோன்பு பெருநாள் தினமாகிய நேற்று(ஞாயிற்றுக்கிழமை) அல் அக்ஸா கல்லூரியில் ஈதுல் பித்ர் நோன்பு பெருநாள் தொழுகையை தொடர்ந்து பாலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவித்து பேரணி ஒன்று இடம் பெற்றது.

இஸ்ரேலுக்கு எதிரான இக் கண்டணப் பேரணியில் பலஸ்தீனத்துக்கு ஆதரவாக பல கோசங்களையும் எழுப்பியிருந்ததுடன் இதனை திருகோணமலை மாவட்ட பள்ளிவாயல் சம்மேளன செயலாளர் எம்.எம்.மஹ்தி ஏற்பாடு செய்திருந்தார்.

இதன் போது பலஸ்தீன கொடியை ஏந்தியவாறு பலர் கலந்துகொண்டனர் இதனைத் தொடர்ந்து திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கலந்து கொண்டு பலஸ்தீனத்துக்கு ஆதரவான மற்றுமொரு நிகழ்வும் கிண்ணியா குறிஞ்சாக்கேணி வீசி மைதானத்தில் இடம் பெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த எம்.எம்.மஹ்தி பலஸ்தீன மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கிக் கொண்டு புனிதமான இந்த நாளிலே இருக்கிறார்கள்.இஸ்ரேல் இன அழிப்பு விடயத்தை செய்து கொண்டிருக்கிறது இதனை இந்த நாடு கண்டிக்க வேண்டும் என்பதுடன் ஆதரவாக குரல் கொடுக்க வேண்டும்.அண்மையில் முஹம்மது ருஸ்தி எனும் இளைஞன் ஸ்டிக்கர் ஒட்டியதற்காக பயங்கரவாததடை சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளார். எனவே ஜனாதிபதி இந்த விவகாரத்தில் தலையிட்டு உடனடியாக இளைஞனை விடுதலை செய்ய வேண்டும். பலஸ்தீன மக்களுக்காக அநுர அரசாங்கம் குரல் கொடுக்க வேண்டும். பலஸ்தீனர்களுக்கு தனி நாடாக , தனி ராஜியம் என்ற அடிப்படையில் வழங்கப்படவேண்டும் .இன அழிப்பை செய்யும் இஸ்ரேலியர்களுக்கு எதிராக மக்கள் கொந்தளிக்கும் நிலை காணப்படுகிறது.

ஆகவே கைது செய்யப்பட்ட முஹம்மது ருஸ்தி விடுதலை செய்யப்படல் வேண்டும் என்பதை மீண்டும் இங்கு வலியுறுத்துகிறோம். தற்போது அரசாங்கமும் பலஸ்தீன மக்களுக்காகக் குரல் எழுப்ப வேண்டும் என கோரிக்கை விடுக்கிறேன். - என்றார்.







# மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தொழுகை

(நூருல் ஹுதா உமர்)

ஒவ்வொரு வருடமும் மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் ஏற்பாட்டில் இடம்பெறும் பெருநாள் தொழுகை இம்முறையும் மிகவும் சிறந்த முறையில் நம்பிக்கையாளர் சபையின் ஏற்பாட்டில் சிறப்பாக இடம்பெற்றது.

இப்பெருநாள் தொழுகையினையும், குத்பா பிரசங்கத்தையும் மாளிகைக்காடு அந்-நூர் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் பேஸ் இமாம் மௌலவி அஷ்ஷெய்க் ஏ.எல்.எம். மின்ஹாஜ் (உஸ்மானி) அவர்கள் நிகழ்த்தினார்.







# அட்டாளைச்சேனையில் நோன்பு

(சியாத்)

அட்டாளைச்சேனை மஜ்ஜிதுல் தஃவா பள்ளிவாயல் ஏற்பாட்டில் நடைபெற்ற புனித நோன்பு பெருநாள் திடல் தொழுகை அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று (திங்கட்கிழமை) காலை 6.30 மணிக்கு நடைபெற்றது.

இந்த நோன்பு பெருநாள் திடல் தொழுகை மற்றும் பேருரையை மௌலவி ஓ.எல்.எம். முபாறக் (ஸஹ்வி) நிகழ்த்தியதோடு, இதில் பெருந்திரளான ஆண்கள், பெண்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த பெருநாள் தினத்தில் முஸ்லீம்கள் செய்ய நற்காரியங்கள் மற்றும் நடந்து கொள்ள வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் பேருரையில் விரிவாக வலியுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.









# கற்பிட்டியில் நோன்பு திடல் தொழுகை

(சியாஜ்)

கற்பிட்டி அனைத்துஜும்ஆ பள்ளிவாசல்களின் ஏற்பாட்டில் அல் அக்ஸா தேசிய பாடசாலை மைதானத்தில் இடம்பெற்ற நோன்புப் பெருநாள் ( ஈதுல் பித்ர்) திடல் தொழுகையின் குத்பா பேருரை அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா கற்பிட்டி கிளையின் செயலாளர் அஷ்ஷேய்க் மிக்தாத் (ரஹ்மானி) அவர்களால் நிகழ்த்தப்பட்டதுடன் பெருநாள் தொழுகை அஷ்ஷெய்க் இஸ்ஸத் (பாரி) நடத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



# மூதூரிலும் திடல் தொழுகை

(மஜிப்ரான்)

இஸ்லாமியர்களின் கடமைகளில் ஒன்றான நோன்புகளை நோற்று நேற்று நோன்பு பெருநாள் கொண்டாடியிருந்தனர்

மூதூர் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று (திங்கட்கிழமை) காலை நோன்புப் பெருநாள் திடல் தொழுகை இடம்பெற்றது.

அல் ஹஸனாஹ் சமூக அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் இவ் நோன்பு பெருநாள் தொழுகை இடம்பெற்றது. தொழுகையினை மௌலவி அப்துல் லத்தீப் (ஸலாமி) அவர்கள் நிகழ்த்தியிருந்தார்.

தொழுகையில் அதிகளவான இஸ்லாமிய மக்கள் கலந்து கொண்டதோடு தொழுகை நிறைவடைந்து தங்களுக்குள் கைலாகு கொடுத்து பெருநாள் வாழ்த்துக்களையும் பரிமாறிக் கொண்டதையும் அவதானிக்க முடிந்தது.






# ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தொழுகை

(நூருல் ஹுதா உமர்)

ஒவ்வொரு வருடமும் சாய்ந்தமருது ஜாமியுல் இஸ்லாஹ் ஜும்ஆ பள்ளிவாசலின் ஏற்பாட்டில் இடம்பெறும் திடல் தொழுகை இம்முறையும் மிகவும் சிறந்த முறையில் அப்பிள் தோட்டம் திடலில் இடம்பெற்றது.

இத்திடல் தொழுகையினையும், குத்பா பிரசங்கத்தையும் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம்.ஸாதிக் (ஸலபி) அவர்கள் நிகழ்த்தி வைத்தார்.





# இஃப்தார்

(தில்சாத் பர்வீஸ்)

முயற்சிக்கு என்றும் முதலிடம் என்ற நாமத்தை மையமாகக் கொண்டு நாடளாவிய ரீதியில் பல சேவைகளை செய்து வரும் ஆர் ஜே மீடியாவின் வருடாந்த இஃப்தார் நிகழ்வு, எம் பவர் விமென்ஸ் அஸோஸியேஷனுடன் இணைந்து ஆர் ஜே மீடியாவின் பணிப்பாளர் ஏ. எம். இன்சாப் அவர்களின் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை சம்மாந்துறை திராஸ்ஸதுல் இஸ்லாமிய அரபுக் கலாசாலையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம். எம். பா(கு)ஸில், சிறப்பு அதிதிகளாக சம்மாந்துறை பிரதேச கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் றஸ்மி மூஸா மற்றும் சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபைத் தலைவர் மௌலவி கே. எம். கே. ஏ. றம்ஸீ(ண)ன் காரியப்பர், திராஸ்ஸதுல் இஸ்லாமிய அரபுக் கலாசாலையினுடைய அதிபரும், ஆர் ஜே மீடியாவின் ஆலோசகருமான கண்ணியத்திற்குரிய மௌலவி ஆர். அஸ்மதுல்லாஹ் தப்லீகி மற்றும் ஈ. ஸி. எம் நிறுவனத்தின் பணிப்பாளர் உதுமான் கண்டு நாபிர் மற்றும் ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், ஆர் ஜே மீடியா உறுப்பினர்கள் என பலரும் இந்த இஃப்தார் நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# மருதமுனை கடற்கரையில் திறந்தவெளிப் பெருநாள்

(ஷினாஸ்)

மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் புனித ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தொழுகை நேற்று(ஞாயிற்றுக்கிழமை) காலை 6.20 மணிக்கு நடைபெற்றது.

இம்முறை கடற்கரை திறந்த வெளியில் இமாம் ஜமாத்தாக நடைபெற்ற புனித நோன்புப் பெருநாள் தொழுகையில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். பெருநாள் தொழுகை மற்றும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற குத்பா பிரசங்கத்தையும் மௌலவி அஷ்ஷெய்க் கலாநிதி எம்.எல். முபாறக் (மதனி) நடத்தினார். ஆண்கள், பெண்களுக்கு வௌ;வேறாக இட வசதிகள் ஒதுக்கப்பட்டு தொழுகை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பலஸ்தீன் மண்ணில் நமது முஸ்லிம் உறவுகள், அப்பாவி சிறுவர்கள் படுகொலை செய்யப்படுவதை கண்டித்து இந்த நோன்புப் பெருநாள் தினத்தில் அனைவரும் பிரார்த்தனை செய்ய வேண்டும் என இங்கு குத்பா பிரசங்கத்தை நிகழ்த்திய மௌலவி பொதுமக்களை கேட்டுக் கொண்டார்.











## பாதாள ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியும். ஆளும்தரப்புடன் இணைவதற்கு எனக்கு எந்த அவசியமும் இல்லை. ஆனால் சில இடங்களில் நாட்டைப் பற்றி பேசும்போது ஆளும்தரப்பைப் பற்றியும் பேச வேண்டியேற்படுகிறது.

அரசியல்இலாபத்துக்காகதாக்குதல்களை நடத்துபவர்கள் நாம் அல்லர். ஆனால் தவறுகள் இடம்பெறும்போது அவற்றை நிச்சயம் சுட்டிக்காட்டுவோம். இதனைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியாதவர்கள் கூறும் கதைகள் தொடர்பில் நாம் கரிசனை கொள்வதில்லை.

களத்தில் இறங்கி தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவற்கான பொறுப்பு வழங்கப்பட்டால் நிச்சயம் அதனைச் செய்வேன்.ஆனால்ஆலோசகர்என்றபெயரில் அலுவலகத்தையும் வாகனங்களையும் வழங்கும்பொறுப்புக்களைஒருபோதும்ஏற்க மாட்டேன். பயங்கரவாத அமைப்புக்களை தோற்கடித்து நாட்டை மீட்க முடியுமெனில் பாதாளஉலகக்குழுக்களைஅழிப்பதொன்றும் எனக்குப் பெரிய விடயமல்ல - என்றார்.

## இந்தியாவுடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் குறித்து பல்வேறு செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால்அவைதொடர்பில் நாட்டுக்கோ அல்லது நாடாளுமன்றத்துக்கோ ஆளும்தரப்பு வெளிப்படுத்தவில்லை.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் எதிர்க்கட்சியிலிருந்தபோது இராஜதந்திர ஒப்பந்தங்கள் தொடர்பில் கூறிய கதைகள் இன்றும் எமக்கு நினைவில் இருக்கின்றன. அந்தச் சந்தர்ப்பத்தில் எந்தவொரு ஜனாதிபதிக்கும்5ஆண்டுகாலவரையறைக்கு அப்பால் ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் உரிமைகிடையாது எனக்குறிப்பிட்டிருந்தனர்.

அவ்வாறெனில் இந்தியப் பிரதமர் நாட்டுக்க வருகை தந்து கையெழுத்திடவுள்ள ஒப்பந்தங்கள் என்ன? அவை தொடர்பில் மறைப்பதைவிட பகிரங்கமாகக் குறிப்பிடுவதே உசிதமானதாகும். சம்பூர் மின்னுற்பத்தி நிலையம் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படவுள்ளதாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

மேலும் அதானி நிறுவனம் இரத்து செய்துள்ள வேலைத்திட்டத்தை மீண்டும் அவர்களுக்கே வழங்குவது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இவற்றின் உண்மை தன்மையை உடனடியாக நாட்டுக்கு வெளிப்படுத்துவமாறு வலியுறுத்துகின்றோம். இந்தியாவுடனான நட்புறவைப் பேணுவது தொடர்பிலோ, பிரதமர் மோடி இலங்கைக்கு வருகை தருவது தொடர்பிலோ எமக்கு எவ்விதப் பிரச்சினையும் இல்லை.

ஆனால் நாடு என்ற ரீதியில் பிரிதொரு நாட்டுடன்ஒப்பந்தம்கையெழுத்திடப்படுகின்றது எனில்அது தொடர்பில்நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டியது அத்தியாவசியமானதாகும் என்றார்.

## பிரித்தானிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதனைத் தெரிவித்தார்.

இந்த நாட்டிற்கு மக்களினது பிரச்சினைகளை விளங்கிக்கொள்ளும் தலைவர் ஒருவர் தேவை. துன்பப்படும் மக்களை விடுவிக்கும் பொறுப்பை எந்தவித பின்வாங்கலும்இன்றிநிறைவேற்றவேண்டும். வங்குரோத்து நிலையில் இருந்து மீளும் பயணத்தில் பெரும் செல்வந்தர்கள் அதிக சுமைகளைச் சுமக்கவேண்டும். துன்புறும் மக்களுக்கான எமது பொறுப்பை சரியாக நிறைவேற்றி அனைவரும் வாழக்கூடிய தாய்நாட்டை கட்டியெழுப்ப வேண்டும்.

எமது நாட்டின் வங்குரோத்து நிலையால் மக்கள் பல இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர். இம்மக்களுக்கு ஆற்ற வேண்டிய பெரும் பணி எம்மத்தியில் இருந்து வருகிறது. பசியாலும்வேதனையாலும்வாடும் மக்களின்வலியையும்கண்ணீரையும்புரிந்து கொண்டு அவர்களுக்கான கடமைகளை நிறைவேற்றவேண்டியதுஎமதுபொறுப்பாகும்.

மக்களுக்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் அமைந்துள்ள சர்வதேச நாணய நிதிய இணக்கப்பாட்டை மக்களுக்குச் சாதகமான ஒன்றாக மாற்றவேண்டும். மக்களைவாழவைப்பதுஎமதுகடமையாகும். இதனை நிறைவேற்ற நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர்சஜித்பிரேமதாசமேலும்தெரிவித்தார்.

## பிரிட்டனின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துக்கொண்ட தேசிய சுதந்திர முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்ஜயந்த சமரவீர குறிப்பிடுகையில்,

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட உட்பட முன்னாள் இராணுவத் தளபதிகளான சவேந்திர சில்வா, ஜகத் ஜெயசூரிய ஆகியோருக்கும், புலிகள் அமைப்பை அழிப்பதற்கு இலங்கை இராணுவத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய கருணா அம்மானுக்கும் பிரித்தானியா தடை விதித்துள்ளதைவன்மையாககண்டிக்கிறோம்.

இந்த நாட்டில் தமிழ், சிங்களம் மற்றும் முஸ்லிம் சமூகத்தினரை விடுதலை புலிகள் அமைப்பினர்படுகொலைசெய்தனர். நாட்டுக்கு எதிரான பயங்கரவாத யுத்தத்தையே இராணுவத்தினர் முடிவுக்கு கொண்டு வந்தனர்.நாட்டு மக்கள் இன்று சுதந்திரமாக வாழ்வதற்கு இராணுவத்தினர் தமது உயிரை பணயம் வைத்து போராடினார்கள்.அதனால் தான் ஒட்டுமொத்த மக்களும் சுதந்திரமாக வாழ்கிறார்கள்.

மிலேட்சத்தனமான விடுதலை புலிகள் பயங்கரவாதஅமைப்பையேஇராணுவத்தினர் முடிவுக்கு கொண்டு வந்தனர். தமது உயிரை பயணம் வைத்த இராணுவத்தினரையே பிரித்தானியாஇன்றுவாங்குகிறது. பிரித்தானிய இராணுவம் சர்வதேச நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளது. இவர்கள் தான் இன்று இலங்கையின் மனித உரிமைகள் பற்றி அக்கறை கொண்டுள்ளார்கள். தடை விதிக்கிறார்கள்.

பிரித்தானியாவின் ஒருதலைப்பட்சமான செயற்பாட்டை தேசிய இனம் என்ற அடிப்படையில் வன்மையாக கண்டிக்கிறோம்.இலங்கையின் முன்னாள் படை பிரதானிகளுக்கு விதித்துள்ள தடையை பிரித்தானியா உடனடியாக நீக்கிக் கொள்ள வேண்டும். பிரித்தானிய அரசாங்கத்தின் முன்பாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தலைக்குனிந்துள்ளமைக்காக ஒட்டுமொத்தஇலங்கையர்களும்தலைகுனிய போவதில்லை.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த இராணுவத்தினர் மீது கைவைப்பதற்கு இலங்கையின்இறையாண்மையைநேசிக்கும் மக்கள் இடமளிக்க போவதில்லை.எமது உயிரை பணயம் வைத்தேனும் எமது இராணுவத்தினரை பாதுகாப்போம் என்றார்.

## சமையல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானித்துள்ளது. இதற்கமைய 12.5 கிலோ கிராம்சிலிண்டரின்விலை 420 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாத விலை சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறு விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. 12.5 கிலோகிராம் நிறையுடைய சிலிண்டரின் புதிய விற்பனை விலை 4100 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் 5 கிலோகிராம் நிறையுடைய சிலிண்டரின் விலை 168 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.அதன் புதிய விலை 1645 ரூபாவாக காணப்படுகிறது.

## பெற்றோலின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய ஒக்டேன் 92 ரக பெற்றோலின் விலை 10 ரூபாவினாலும், ஒக்டேன் 95 ரக பெற்றோலின் விலை 10 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளது.டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலை திருத்தம் செய்யப்படவில்லை.

இதற்கமைய லங்கா சுபர் டீசல் ஒரு லீற்றரின் விலை 286 ரூபா, லங்கா டீசலின் விலை 331 ரூபா, ஒரு லீற்றர் மண்ணெண்ணையின்விலை183என்பதில் எவ்வித மாற்றமுமில்லை.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# முள்ளிப்பொத்தானையில் திடல் தொழுகை

(ஹஸ்பர்)

புனித நோன்பு பெருநாள் தினமான நேற்று (திங்கட்கிழமை) திருகோணமலை மாவட்ட ,முள்ளிப்பொத்தானை ஈச்ச நகர் பொது விளையாட்டு மைதானத்தில் ஈதுல் பித்ர் நோன்பு பெருநாள் திடல் தொழுகை இடம் பெற்றது.

இதனை முள்ளிப்பொத்தானை புஹாரி ஜும்ஆ பள்ளி நிருவாகத்தின் ஏற்பாட்டில் ஈச் கழகம் மற்றும் புஹாரி ஜனாசா நலன்புரி சங்கம் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

குறித்த குத்பா பிரசங்கம் மற்றும் தொழுகையை தம்பலகாமம் பிரதேச கிளை ஜம்மியதுல் உலமா சபை தலைவர் மௌலவி ஏ.எல்.எம்.குசைன் நடத்தினார்.

இதில் பல நூற்றுக் கணக்கான ஆண் பெண்கள் என கலந்து கொண்டதுடன் ஒவ்வொருவரும் கைலாகு கொடுத்து நோன்பு பெருநாள் வாழ்த்துக்களையும் பகிர்ந்து கொண்டனர்.





# கல்முனை ஹுதா திடலில் புனித நோன்புப் பெருநாள்

**நபிவழித்திடல் தொழுகை.**

(அஷ்ரப்கான்)

புனித நோன்புப் பெருநாள் நபிவழித் திடல் தொழுகை கல்முனை ஹுதா திடலில் ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல் மற்றும் முஹம்மதிய்யா ஜும்ஆ





பள்ளிவாசல்களின் ஏற்பாட்டில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றது.

இங்கு பெருநாள் தொழுகையையும் குத்பா பிரசங்கத்தையும் மௌலவி அஷ்ஷெய்க் ஏ.கலீலுர் ரஹ்மான் (ஸலபி) அவர்கள் நிகழ்த்தினார்.

இங்கு ஆயிரக்கணக்கான ஆண் பெண் இருபாலாரும் நோன்புப் பெருநாள் தொழுகையில் கலந்துகொண்டதுடன் பலஸ்தீன் காஸா மக்களுக்காக பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.



# வாழைச்சேனையில் 4 கஜமுத்துக்களுடன் மூதூரைச் சேர்ந்த ஒருவர் கைதாகினார்

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள தியாவட்டுவான் பகுதியில் 4 கஜமுத்துக்களை விற்பனை செய்ய முயற்சித்த நபர் ஞாயிற்றுக்கிழமை விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை கடதாசி ஆலை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய சம்பவதினமான ஞாயிறு இரவு 7.00 மணியளவில் விசேட அதிரடிப்படை பொறுப்பதிகாரி ரத்நாயக்கா தலைமையிலான குழுவினர் குறித்த பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போததே கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

அங்கு கஜமுத்துக்களை விற்பனை செய்ய முற்பட்ட மூதூர் ஆலிம் நகரைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவரை சுற்றிவளைத்து கைது செய்ததுடன் அவரிடமிருந்து 4 கஜ முத்துக்களை கைப்பற்றியுள்ளனர்.

மேலும், கைது செய்யப்பட்டவரையும் கைப்பற்றப்பட்ட சான்று பொருள்களையும் விசேட அதிரடிப்படையினர் பொலிஸாரிடம் ஒப்படைத்ததையடுத்து அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழில் ஐஸுடன் இளைஞன் கைது

## தாயாருக்கும் விளக்கமறியல்

*யாழ்ப்பாணம் - ஏழாலை, தெற்கு மயிலங்காடு பகுதியில் 10 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.*

*சுன்னாகம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.*

*கைது செய்யப்பட்டவர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞன் ஆவார்.*

*குறித்த இளைஞன் ஏற்கனவே ஒரு தடவை போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட நிலையில் 6 மாதங்கள் சிறையில் இருந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.*

*அந்த வழக்கும் இன்னமும் நிலுவையில் உள்ளதாகவும் அத்துடன் குறித்த இளைஞனின் தாயார் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் போதைப்பொருளுடன் கைதாகி சிறையில் உள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.*

*இந் நிலையில், குறித்த இளைஞன் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டு சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்துப்பட்டு வருகிறார்.*

*விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரை, மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.04.2025இல் வெளியிடப்பெற்றது